[10th April 1958

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் திருத்துவதற்கு ஒன்றுமில்லை. 15-வது தொழிலாளர் மகாநாட்டில் நடந்த ஆலோசனை களைப்பற்றி எல்லா தொழிலாளர்கள் கமிட்டியினுடைய கவனத்திற்கும் கொண்டு வரப்படும்.

SRI V. K. KOTHANDARAMAN : இப்போது கொடுக்கப்படும் ஊதியம் இப்போதுள்ள விலைவாசியில் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே உடனடியாக குறைந்த பட்ச சம்பளம் கொடுக்கவேண்டும் என்று தொழிலாளர்கள் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டதாக சொன்னார்கள். ஆனால் சர்க்கார் அவ்விதம் கொடுப்பதற்கு இதுவரையில் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. அதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவ்வாறு எந்த முடிவும் செய்யவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது தவறு.

SRI T. S. RAMASWAMY PILLAI : இந்த மினிமம் வேஜஸ் ஆக்ட் ஷெட்யூலில் புதிதாக எந்தெந்த தொழிலாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : I cannot prophesy.

Scholarships

* 685 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state the amounts allotted to the South Arcot district from the year 1955–56 up to date towards the grant of non-residential scholarship to Harijan children year war?

THE HON. SRI P. KAKKAN :

Year.	Amount allotted.
	RS.
1955–56	20,459
1956–57	15,000
1957–58	17,500

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவர் கள் இம்மாதிரி நான்-ரெஸிடன்ஷியல் ஸ்காலர்ஷிப் சலுகை இல்லாமல் சிரமப்படுகிறார்கள். ஆகவே இந்த தொகையை அதிகரித்து எல்லா ஹரி ஜன மாணவ மாணவர்களுக்கும் இந்த உபகார சம்பளம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மாகாணத்தில் தென்னாற்காடு ஜில்லாவிற்குத்தான் ஹரிஜன மாண வர்களுக்காக ஸ்காலர்ஷிப் தொகை அதிகமாக கொடுக்கப்படுகிறது என் பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். எவ் வளவோ தொகை செலவு செய்யப்பட்டு வருகிறது. இதை இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. 1955–56-ல் இதற்காக 20,459 ரூபாய் ஒதுக்கப் பட்டிருந்தது. ஆனால் அதற்கு மேலாக செலவு செய்யப்பட்டது. அதாவது 21,135 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 1956–57-ல் 11,497 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 1957–58-ல் 16,505 ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தென்னாற் காடு ஜில்லாவுக்கு அதிகமாகத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

Warders

* 686 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri T. T. Daniel) : Will the Hon. the Minister for Home be